முருகப்பெருமான் துணை

**மகான் அத்திரிமகரிஷி அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

07.07.2021, புதன்கிழமை

1. அருமருந்தாக உலக மக்களுக்கு
அமுதளித்து பசிபிணி விரட்டும்
குருவரங்கன் திருவடி போற்றி
குவலயத்தார் வணங்கி வர
2. வருகவே உலகினில் மாற்றம்
வந்தடையும் எனக் கூறி
பெருமைபட துல்லிய ஆசியை
பிலவ மிதுன திங்கள் தன்னில்
3. தன்னிலே மூவேழீர்திகதி புந்திவாரம்
(பிலவ வருடம் ஆனி மாதம் 23ம் நாள், 07.07.2021 புதன்கிழமை)
தவசிக்கு அத்திரி மகரிஷி யானும்
அண்ணலின் ஞானமாக இணைந்தருளி
அகிலத்தார் ஞானவான்களாக அருள் தருவேன்
4. தருகவே தனித்துவம் மிக்க
தவராஜன் சன்மார்க்கம் தனை
முருகப் பெருமான் சக்தியாக
முழுமைஞானமாக ஏற்று மக்கள் வர
5. வருகவே கலியின் துன்பங்கள்
வழிதெரியா அகன்று ஓடும்
தரும பலம் சிறந்த வழியென
தரணியோர் அறிய வேண்டி
6. வேண்டியே அன்னதான சேவை
விடாது தொடர்ந்து செய்து
தொண்டெனும் உயர் வழியை
தேசிகன் எளிய மார்க்கமாக
7. மார்க்கமாக யாவரும் அருள
மகத்துவத்தினை அதனுள் யான்
நேர்த்தியாக வரமாக சேர்க்க
நிலமதனில் அரங்க ஞானியை
8. ஞானியை தொடரும் மக்களுக்கு
ஞாலமதில் என் அருள் துணையுமுண்டு
இனிமேலாய் தொண்டர்கள் வழி
இறைசக்தியாக குருவருள் பரவி
9. பரவியே பாதுகாப்பு கூடிட
பாருலகம் பேரிடரை வெல்லும்
தரணியிலே நாம செபபலம்
தவபலமாக மக்களை சேரும்

10. சேரவே ஆகாத சேர்மானம்
செயல்வழி குற்றம் அனைத்தும்
கூறவே உடன் அகன்றுமேவி
குறைவிலா வளர்ச்சி காணும்

11. காணவே உயர்வழிாடு தருமம்
கந்தவேலன் அருளாசி எனகூடி
ஞானவான்கள் எனும் சக்தியாகி
ஞான ஆட்சி காலம் படைப்பர்
துல்லிய ஆசி முற்றே
–சுபம்–